# 13. பரசுப்பிரமணியவாழ்வு.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருஞானந் தனையடையத் தவம்புரிக வென்னவுமத் திருஞா னத்தாற்
பெருஞானப் பிரமத்தை யறிந்திடலா மென்னவுநற் பெருமை வாய்ந்து
தெருளான தைத்திரிய வுபநிடத மறைந்திடுமத் தீர்வைக் கேனும்
மருளேனை விடுத்ததுண்டோ வெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. 1

**உ**டம்புமுத லானந்தம் வரையொன்றற் கொன்றுள்ளே யுளவோ ரைந்து
சடங்களெனு மைங்கோசக் குகைக்கப்பா லுளகுகனைத் தரிசித் திட்டால்
அடங்கடந்த முத்தியெனத் தைத்திரிய வுபநிடத மதிர்க்கு மத்தை
மடஞ்செறிந்த யானடைவ தென்றெனையாள் பரசுப்பிர மணிய வாழ்வே. 2

**எ**ம்மூர்த்தி களுமற்றை யெல்லாமும் பரசிவனே யிணையி லந்தப்
பெம்மானை யறிந்தவனே மிருத்துவினைத் தாண்டுகிறான் பெரிய வீட்டுக்
கிம்மார்க்க மலதில்லை யெனுமெசுவின் கைவலிய மிசைத்த வாறு
மம்மருளே னறிந்துய்வ தெக்காலென் பரசுப்பிர மணிய வாழ்வே. 3

**சி**ரத்தையருும் பத்திதியா னம்யோகங் காரணமாச் சிவஞா னந்தான்
நிரப்பறவே வாய்க்குமெனா யசுவின்கை வலியோப நிடதங் கூறும்
உரப்பில்லே னுக்கவைதா மெந்தவா றமைவுறுமன் புடையர்க் கீநல்
வரத்தரசே யருள்புரியா யெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. 4

---

10. **நகம்** = மலை.
3. **கைவலியம்** = **கைவல்யோபநிஷத்.**

**ஈ**ச்சுரசாட் சாற்காரத் தான்மோக்க மென்றதர்வ சிரசு கூறும்
பூச்சனன நீப்பாரெல் லார்க்குமிது பூர்த்திதரு பொருத்த மென்னாப்
பேச்சறையத் தடையாதீ தடியேற்குக் கிட்டாது பின்னிட் டக்கால்
மாச்சிரம மாமன்றோ வெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. 5

**சி**த்தநிரோ தந்தானே சமாதியென்று மதுவேசாத் தியமா மென்றும்
மித்தைசொலா வமுதவிந்தா முபநிடதந் தெற்றெனவே விளக்கா நிற்கும்
அத்தையிந்தப் பேதைமையே னடையொழுங்கு நீபணித்தா லன்றோ மங்கா
மத்துடையோ னாயுய்வே னெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. 6

**இ**னியசமா திக்குரித்தா மேகாக்கிர சித்தமந்த வீச்சு ரன்றன்
கனிவுகிள ருபாசனையா லாமெனவைம் மூன்றுபிர கரணத் துள்ளே
நனிபகரத் திருத்திதீ பங்கிளத்த லானுமந்நூ னடையுள் ளாரும்
வனமிதுவன் றென்னநடு வுளதோவென் பரசுப்பிர மணிய வாழ்வே. 7

**ஏ**சில்சித்தி யார்சுபக்க மிரண்டாஞ்சூத் திரமிருபத் தெட்டி லென்றும்
ஆசில்சுத்த மானதமாம் பூசைமகத் தென்றுமணங் கான்றோர் வண்மை
பேசுபத்தில் யானெனதென் னுஞ்செருக்கை மாய்ப்போன்மால் பெறுமென்றுஞ்சொல்
மாசினித்த நெறியெற்கு மென்றுறுமென் பரசுப்பிர மணிய வாழ்வே. 8

**க**ன்மமுயர் யாகத்தும் புண்ணியமா நதிகண்முழுக் காதி யாய
தன்மதபோ யாகமுமவ் வியாகத்துஞ் சற்சபமுஞ் சபயா கத்தும்
புன்மையின்மா னசமாகுந் தியானயா கமுமுறையே புகலொண் ணாத
மன்னெனச்சை வபுராணஞ் சொலுமெனையாள் பரசுப்பிர மணிய வாழ்வே. 9

**தி**ராவிடவோத் தேயுறுதெள் ளேணத்திற் சொனபோதச் சிதைவுஞ் சைவ
புராணவளிச் சங்கிதையின் ஞானநிலை யுரைத்தவயிற் புகன்ற வண்ணம்
அராகமல மாயைகெடிற் சிவனாவன் சீவனென்னு மமைவு மெற்கு
வராமலுமுய் வேனூற்றப் புதன்புகழென் பரசுப்பிர மணிய வாழ்வே. 10

---

6. **மத்து** = உள்ளக் களிப்பு.
7. **ஐம்மூன்று பிரகரணம்** = **பஞ்சதசப்பிரகரணம். வனம்** = வழி; “பட்டமும் **வனமுங்** காலும் பதமும் - வட்டையும் ....... வழியெனல்” என்பது **பி - நிகண்டு.**
8. **அணங்கான்றோர்** = தெய்வப் புலவர்.
9. **சைவபுராணம்** = **சைவபுராணத்து** ஞானசங்கிதை 26 - ஆம் அத்தியாயம்.
10. **தெள்ளேணம்** = **தெள்ளேணத்து** 4, 18. **வளிச்சங்கிதை** = வாயுசங்கிதை.